செய்தி வெளியீடு எண்: 74/2026 **நாள்: 13.11.2026**

பத்திரிகைச் செய்தி

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 வழித்தடம் 5-ல் குறிஞ்சி என பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெற்றிகரமாக பணியை முடித்து சீனிவாச நகர் மெட்ரோ நிலையத்தை வந்தடைந்தது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கட்டம் II-ல் 118.9 கி.மீ. நீளத்திற்கு மேலும் 3 வழித்தடங்களை கட்டி முடிக்க திட்டமிட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. கட்டம் 2 வழித்தடம் 5 மாதவரம் பால் பண்ணையில் தொடங்கி கோயம்பேடு, போரூர், ஆலந்தூர் வழியாக சோழிங்கநல்லூர் வரை 47 கி.மீ நீளத்தில் 5 சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்களும் (5.8 கி.மீ.), 39 உயர்மட்ட மெட்ரோ இரயில் நிலையங்களும் (41.2 கி.மீ) அமைக்கப்படவுள்ளது. 5.8 கி.மீ. நீளம் கொண்ட இந்த சுரங்கப்பாதை பிரிவுக்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என 4 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தபடுகின்றன. வழித்தடம் 5 சுரங்கப்பாதை பிரிவில் 5 மெட்ரோ இரயில் நிலையங்கள், 2 சாய்வுப் பாதைகள் அமைக்கும் பணிகள் Tata Projects நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு இதற்கு JICA நிறுவனம் நிதியுதவி அளிக்கின்றது.

வழித்தடம் 5-ல் சுரங்கப்பாதை கட்டுமான பணிகளில், சுரங்கம் தோண்டும் இயந்திரம் குறிஞ்சி கொளத்தூர் மெட்ரோ நிலையத்திலிருந்து சீனிவாச நகர் மெட்ரோ நிலையம் வரை 1080 மீ. நீளத்திற்கு சுரங்கம் அமைக்கும் பணியை 27.11.2025 அன்று தொடங்கி இன்று (13.11.2026) சீனிவாச நகர் மெட்ரோ நிலையத்தை வந்தடைந்தது.

இந்தச் சுரங்கம் தோண்டும் பணியின் போது மண், சிதைந்த பாறை மற்றும் மிகக் கடினமான பாறைகள் (கிரேடு 1-5) நிறைந்த மாறுபட்ட நிலப்பரப்பில் 230 மீட்டர் சுற்றளவு கொண்ட செங்குத்தான வளைவைக் கடப்பதும், அதிகக் குடியிருப்புகள் நிறைந்த பகுதியில் 70-க்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் திறந்தவெளிக் கிணறுகளைக் கடந்து செல்வதும் பெரும் சவால்களாக இருந்தன. இருப்பினும், இந்தத் தடைகளையும் மீறி பொதுமக்கள் மற்றும் தினசரிப் போக்குவரத்திற்கு எந்தவொரு இடையூறும் இன்றி சுரங்கம் தோண்டும் பணி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சாதனை, மக்கள் நடமாட்டம் மிகுந்த குடியிருப்புப் பகுதிகள் மற்றும் பள்ளிகளுக்கு அடியில் 230 மீட்டர் சுற்றளவு கொண்ட செங்குத்தான வளைவில்

எவ்வித தடங்கலுமின்றி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட வழித்தடம் 5-ன் (Package C5UG06) முதல் சுரங்கம் தோண்டும் பணியின் நிறைவாகும். அத்துடன், இவ்வழித்தடத்தில் இதுவரை 3.78 கி.மீ தூரத்திற்கான சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு நிறைவடைந்துள்ளன. இது, சென்னையின் வளரும் மக்கள் தொகைக்கு பாதுகாப்பான, நிலையான மற்றும் திறமையான நகர்ப்புறப் போக்குவரத்து சேவையை வழங்குவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., திட்ட இயக்குநர் திரு. தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர்கள் திரு. டி. லிவிங்ஸ்டன் எலியாசர், (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), திரு. கே. குருசாமி, (உயர்மட்ட மற்றும் சுரங்கப்பாதை கட்டுமானம்), இணை பொது மேலாளர் திரு.எம்.கார்த்திகேயன் (சுரங்கப்பாதை கட்டுமானம்), Tata Projects நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.கே.ரமேஷ், திட்ட மேலாளர் திரு. நத்தபோங் கட்கேவ், பொது ஆலோசகர் நிறுவனத்தின் குழுத் தலைவர் திரு. டோனி பர்ச்செல், தலைமை பொறியாளர் திரு. எ. உதயகுமார், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், Tata Projects நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: மக்கள் தொடர்புத் துறை,
சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.